# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.4/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.7 |
| Name : | டாக்டர்.வைஷ்ணவி |
| Father's/Husband Name: | டாக்டர்.G.கவின் |
| Village : | திருச்சி |
| Taluk : | திருச்சி |
| Age : | 35/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.02.2025.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. P.தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி A3-செல்லதுரை ஆஜர். A1-பழனிசாமி ஆஜர் இல்லை. மனு செய்து கொள்ளப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது திருச்சியில் உள்ள தீபன் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2022-ம் தேதி மாலை 06.15 p.m. மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பிள்ளையார்பாளையம் கிராமத்தை சேர்ந்த சின்னபூவான் மகன் கந்தசாமி என்பவர் சிகிச்சைக்காக முத்துகுமார் என்பவர் மூலம் அழைத்துவரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது 17.01.2022-ம் தேதி அன்று மாலை 04.30p.m. மணியளவில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னை கையால் அடித்ததாக கூறினார்.

(ii) மேற்படி விபரங்களையும் அவரை பரிசோதித்தும் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவருக்கு இரத்த அழுத்தம் சீராகவும் இருந்தது . அவருக்கு கீழக்கண்ட காயங்கள் இருந்தன.

1. இடது கண்ணில் ஒரு கன்றிய காயம் – 3 செ.மீx3 செ.மீ அளவில்

இடது கண் பார்வை சரியாக தெரியவில்லை என்று சொன்னார். அதனை விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரது காயம் தொடர்பாக நெஞ்சு பகுதிக்கு CT Scan எடுத்து பார்த்ததில் அவருக்கு இடது புறம் 09, 10, 11வது விலா எலும்புகள் முறிந்து காணப்பட்டது. நுரையீரலை சுற்றி இரத்தம் தேங்கி இருந்த நிலையில் காணப்பட்டது. பின்னிட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று 21.02.2022ம் தேதி காயச்சான்றிதழை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் தான். (அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்சொன்ன ஆயுதத்தால் ஒருவர் தாக்கப்படும் போது மேற்சொன்ன காயங்கள் ஏற்படவாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) முத்துகுமார் என்பவர் தான் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். நோயாளிக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். தெரிந்த நபர் ஒருவர் மட்டும் தான் தன்னை தாக்கியதாக நோயாளி சொன்னார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் இடது கண்ணில் கன்றிய காயம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் எலும்பு முறிவுகள் இருந்ததாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயச்சான்றிதழில் நோயாளிக்கு X–Ray எடுக்கப்பட்டதாகவும், CT Scan எடுக்கப்பட்டதாகவும் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நோயாளி உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டரா புறநோயாளியாக சிகிச்சை அளிகக்ப்பட்டாரா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நோயாளி சேர்க்கப்பட்டது 17.01.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து தன்னை தாக்கியதாக நோயாளி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 20.01.2022ம் தேதி நோயாளி டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் என்றால்

சரிதான்.  இருசக்கர வாகனத்தில் வேகமாக செல்லும்போது தவறி விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை